தலைப்பு 271 – திருகோணமலை மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 271 – திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள ் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள ்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் அடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே மாதம் 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே மாதம் 28 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனதுஅபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் திருகோணலை மாவட்ட செயலகத்தின் பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை திருகோணலை மாவட்ட செயலகத்தின் பொதுத் திறைசேரியினதும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திருகோணலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2023 திசெம்பர் 31 திகதி திறைசேரி அச்சீட்டு (SA-82) நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் பிரகாரம் லெஜர் இலக்கம் 9151, 9152, 9153 மற்றும் 9160 கீழ் உள்ளடக்கியிருந்த 15 தொகுதி உருப்படிகளின் இறுதி மீதிகள், 2024 ஆண்டு நிதிக்கூற்றுத் தொகுதியில் அதற்கு இணங்க ஆரம்ப மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 3,807,620,445 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அந்த வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.	2023 திசெம்பர் 31 திகதி திறைசேரி அச்சீடு (SA-82) நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் பிரகாரம் லெஜர் இலக்கம் 9151, 9152, 9153 மற்றும் 9160 கீழ் உள்ளடக்கியிருந்த 15 தொகுதி உருப்படிகளின் 2023 ஆண்டின் இறுதி மீதி 2024 ஆண்டின் நிதியல்லா கூற்றுத் தொகுதியில் அதற்கு நேரொத்த ஆரம்ப மீதிகள் மாற்றமடைந்துள்ளது. பண்டக கணிப்பீடு மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் பண்டங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படும் போது சில பண்டங்களின் பெறுமதி மாற்றமடைந்ததாகும். இந் நிலைமை காரணமாக 2023 ஆண்டின் இறுதி மீதிகள் மற்றும் 2024 ஆண்டின் ஆரம்ப மீதிகளிற்கிடையே வித்தியாசமொன்று ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் அதனை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	கணக்கீட்டு நடவடிக்கைகளிற்கு அடிப்படையாகக் கொள்ளும் மூல ஆவணங்கள் மற்றும் ஏனை அறிக்கைகளை உரியவாறு நாளாதுவரையாக்க வேண்டியதுடன், மீதி மாற்றத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும்.
(ii)	திறைசேரி அச்சீடு மீதி பரீட்சிப்பின் பிரகாரம் 9151, 9152 மற்றும் 9160 ஆகிய லெஜர் இலக்கத்தின் கீழ் 2024 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா 64,820,518 ஆன போதும், திறைசேரி அச்சீடு (SA-82) நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் பிரகாரம் மேற்படி லெஜர் இலக்கங்களின் கீழ்	திறைசேரி அச்சீடு மீதி பரீட்சிப்பின் பிரகாரம் 9151, 9152 மற்றும் 9160 ஆகிய லெஜர் இலக்கத்தின் கீழ் 2024 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா 64,820,518 மற்றும் திறைசேரி அச்சீடு (SA-82) நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் பிரகாரம் மேற்படி லெஜர் இலக்கங்களின் கீழ் கொள்வனவு செய்திருந்த நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா 26,997,865 ஆகும்.	கணக்கீட்டு நடவடிக்கைகளிற்கு அடிப்படையாகக் கொள்ளும் மூல ஆவணங்கள் மற்றும் ஏனை அறிக்கைகளை உரியவாறு நாளாதுவரையாக்க வேண்டியதுடன், அதனுடனான உள்ளக

	கொள்வனவு செய்திருந்த நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா 26,997,865 ஆனதில் ரூபா 37,822,653 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	அங்கு ரூபா 37,822,653 வித்தியாசம் காணப்படுவதற்கான காரணமாவது பிரதேச செயலகங்களில் CIGAS முறைமையை ஆண்டு முழுவதும் சரியாக நாளாதுவரையாக்கி CIGAS WEB INTERFACE இற்கு உரியவாறு நாளாதுவரை செய்யாததன் மீது நிதியல்லா சொத்துக்களின் பெறுமதியில் வித்தியாசம் ஏற்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டினுள் சரியாக நாளாதுவரையாக்கி மீண்டும் இவ்வாறான வித்தியாசங்கள் ஏற்படாதவாறு பொறுப்பேற்பதாக உறுதி செய்கிறேன்.	கட்டுப்பாட்டை வலுவூட்ட வேண்டும். குறித்த சீராக்கங்களை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.
(iii)	திறைசேரி அச்சீடு (SA-82) நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் போக்குவரத்து மற்றும் ஏனைய இயந்திர உபகரண சொத்துக்கள் தொகுதியில் ஆரம்ப மீதிக்கு சேர்ப்பனவு மற்றும் கொள்வனவுகளின் மொத்த பெறுமதி ரூபா 24,050,870 ஆன போதும், மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 22,321,158 ஆனதில் ரூபா 1,729,712 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	திறைசேரி அச்சீடு (SA-82) நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் லெஜர் இலக்கம் 9152 (போக்குவரத்து மற்றும் ஏனைய இயந்திர உபகரணகள்) சொத்துக்கள் தொகுதியில் ஆரம்ப மீதிக்கு சேர்ப்பனவு மற்றும் கொள்வனவுகளின் மொத்த பெறுமதி ரூபா 24,050,870 (ரூபா 4,268,005 + 19,782,865) மற்றும் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 22,321,158 ஆவதுடன் அதன் வித்தியாசமான ரூபா 1,729,712 இற்கு காரணமாகவுள்ளது சில பிரதேச செயலகங்களில் CIGAS முறைமையை ஆண்டு முழுவதும் சரியாக நாளாதுவரையாக்கி CIGAS WEB INTERFACE இற்கு உரியவாறு நாளாதுவரை செய்யாததாகும். இந்த ஆண்டில் இருந்து சரியாக தயாரிப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	கணக்கீட்டு நடவடிக்கைகளிற்கு அடிப்படையாகக் கொள்ளும் மூல ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உரியவாறு நாளாதுவரையாக்க வேண்டியதுடன், இணக்கமின்மைக்கான காரணத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும்.
(iv)	திறைசேரி அச்சீடு (SA-82) நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் நடைமுறை வேலையின் (WIP) கீழ் நடைமுறையாண்டில் சேர்ப்பனவு மற்றும் அகற்றுதல் எதனையும் குறிப்பிட்டிருக்காத போதும், மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பிரகாரம் சேர்ப்பனவு மற்றும் அகற்றுதலாக முறையே ரூபா 4,275,000 மற்றும் ரூபா 1,490,000 குறிப்பிட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.	சில பிரதேச செயலகங்களினால் சொத்துக்களை அறிக்கையை தயாரிக்கும் போது நடைமுறை வேலை (WIP) சேர்ப்பனவு அகற்றுதலை உட்படுத்தாது அரச கணக்குள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த மாதங்களிலே தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதிகளின் சேர்ப்பனவு அகற்றுதலை சரியாக உட்படுத்தப்பட்டுள்ளது. அதனால் இந்த வித்தியாசம் உறுவாகியுள்ளது. இந்த 02 அறிக்கைகள் 02 சந்தர்ப்பங்களில் திணைக்களத்திற்கு அனுப்பப்படுவதால் இந்த குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. தற்போது அதனை இனங்கண்டு சேர்ப்பனவு மற்றும் அகற்றுதலைகளை உட்படுத்தி சரிசெய்யப்பட்டுள்ளது. இதன் பின்னர் அவ்வாறு இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கிறேன்.	கணக்கீட்டு நடவடிக்கைகளிற்கு அடிப்படையாகக் கொள்ளும் மூல ஆவணங்கள் மற்றும் ஏனை அறிக்கைகளை உரியவாறு நாளாதுவரையாக்க வேண்டியதுடன், குறித்த சீராக்கத்தை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.

(v)	2024 மே 16 திகதிய அரச கணக்குள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிட்ட இலக்கம் SA/MFS/C1/C1/11/271 கொண்ட கடிதத்தில் குறிப்பிடுவதன் பிரகாரம் தம்பளகமுவ மற்றும் குச்சவேலி பிரதேச செயலகங்களில் ரூபா 93,150,000 இற்கு மதிப்பிடப்பட்ட காணி மற்றும் கட்டிட பெறுமதியை 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்களின் கீழ் (SA-82) உட்படுத்தவில்லை என அவதானிக்கப்பட்டது.	தம்பளகமுவ மற்றும் குச்சவேலி பிரதேச செயலகங்களில் ரூபா 93,150,000.00 ஆன கிரயத்திற்கு மதிப்பிடப்பட்ட காணி மற்றும் கட்டிட பெறுமதியை 2025 அண்டு மார்ச் மற்றும் 2025 ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது.	காலப் பகுதிக்குரிய சொத்துக்களை உரியவாறு கணக்கீடு செய்து சமர்ப்பிக்க வேண்டும்.
(vi)	2020 திசெம்பர் 31 திகதி சேருவில பிரதேச செயலகத்தனால் கொள்வனவு செய்த ரூபா 74,000 கிரயமான 05 இராக்கைகள் 2020 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் (SA-82) நடைமுறை வேலையின் (WIP) கீழ் காட்டியிருந்ததாக அவதானிக்கப்பட்டது.	2020 திசெம்பர் 31 திகதி சேருவில பிரதேச செயலகத்தனால் கொள்வனவு செய்த ரூபா 74,000 கிரயமான 05 இராக்கைகள் 2025 ஆண்டு மார்ச் மாதம் CIGAS முறைமையினுள் உட்படுத்தப்பட்டுள்ளது.	குறித்த சொத்துக்களை உரியவாறு வகைப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேதொத்ததாகும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த அறிக்கையின் 1.61 (i), (ii), மற்றும் (iii) பந்திகளில் குறிப்பிடப்படும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதிமீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அரச கணக்குகள் வழிகாட்டியின் இலக்கம் 06/2024 கொண்ட, 2024 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது	2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அரச கணக்குகள் வழிகாட்டியின் இலக்கம் 06/2024 கொண்ட, 2024 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை	சுற்றறிக்கை பிரகாரம் சேமிப்பு தொடர்பாக தெளிவான காரணங்களை நிதிக்கூற்றுக்களில் சமர்பிக்க

	தொடர்பான வழிகாட்டி மற்றும் படிவக் கோவையின் 3.4 பந்தி பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதியன்று சேமிப்பின் மொத்த தேறிய நிதிஏற்பாட்டின் 05 சதவீதம் அல்லது ரூபா 10,000 ஆகிய இரண்டில் ஏதேனும் அதிக தொகையைவிட அதிகரிக்கும் போது அந்த அதிகரிப்புக்கான காரணத்தை நியாயப்படுத்த தேவையான விடயங்களை உள்ளடக்க வேண்டிய போதும், எஞ்சியிருந்த ரூபா 30,553,347 ஆன நிதிஏற்பாடு தொடர்பாக அவ்வாறான விடயங்களை சமர்ப்பித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	தயாரிப்பது தொடர்பான வழிகாட்டி மற்றும் படிவக் கோவையின் 3.4 பந்தி பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதியன்று செமிப்பின் மொத்த தேறிய நிதிஏற்பாட்டின் 05 சதவீதம் அல்லது ரூபா 10,000 ஆகிய இரண்டில் ஏதேனும் அதிக தொகையைவிட அதிகரிக்கும் போது அந்த அதிகரிப்புக்கான காரணத்தை நியாயப்படுத்த தேவையான விடயங்களை உள்ளடக்க வேண்டிய போதும், எஞ்சியிருந்த ரூபா 30,553,347 தொடர்பாக தொடர் இலக்கம் 01 முதல் 04 வரை விடயம் மற்றும் செலவின விடயம் பிரகாரம் அதற்குரிய காரணம் பதிலுடன் சமர்ப்பித்துள்ளதென.	வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்குட்படல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திருகோனமலை மாவட்ட செயலகம மற்றும் பட்டினம் மற்றும் சூழல் பிரதேச செயலகத்தினால் 2024 ஆண்டிற்குரியதாக 2025 ஆண்டில் செலுத்தியிருந்த ரூபா 1,708,909 கிரயமான 26 பட்டியல்களின் பெறுமதி 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் பொறுப்பக்களாக உட்படுத்தாததாக அவதானிக்கப்பட்டது.	மேலும் 02/189 கொண்ட 990,056 ஆன பழுதுபாரத்தல் பட்டியலிற்காக 2024 ஆண்டில் 271 தலைப்பின் கீழ் நிதிஏற்பாடு போதியளவு இருக்காததால் நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக உட்படுத்தப்படவில்லை. அவ்வாறே மேலும் 02 பட்டியல்கள் நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக உட்படுத்த இருக்கவில்லை.	பொறுப்புக்களாக காணப்படும் அனைத்து பட்டியல்களையும் பொறுப்பின் கீழ் உட்படுத்த வேண்டியதுடன், அது பற்றி உறுதி செய்யும் உள்ளக வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும்.

3.3 ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களினால் வழங்கிய நிதிஏற்பாட்டு பயன்பாடு.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2019/20 பெறும் போகம் முதல் 2022 ஆண்டிற்காக நெல் கொள்வனவு செய்யும் துரித வேலைத்திட்டத்தின் கீழ் கந்தலாய் பிரதேச செயலக பிரிவில் 04 அரிசி ஆலை உரிமையாளர்களிடம்ரந்து, பதவிய ஶ்ரீ புர பிரதேச செயலக பிரிவில் 02 அரிசி ஆலை உரிமையாளர்களிடம்ரந்து மற்றும் சேருவில பிரதேச செயலக பிரிவில் 02 அரசி ஆலை உரிமையாளர்களிடமிருந்தும் 08 ஆலை உரிமையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய கூட்டுப் பெறுமதி ரூபா 49,770,694 தொகை 04	கந்தலாய் பிரதேச செயலாளரினால் பல முறைகள் அறிவுருத்தியுள்ள போதும் இதுவரை கந்தலாய் 04 அரிசி ஆலை உரிமையாளர்களினால் அரசிற்கு அறவிட வேண்டிய தொகையை இதுவரை செலுத்தவில்லை. சட்ட நடவடிக்கையாக கந்தலாய் பொலிஸிற்கு முறைபாடு செய்துள்ளதுடன் இது தொடர்பாக கந்தலாய் பிரதேச செயலாளரினால் சட்ட நடவடிக்கை எடுத்து வருகிறார்.	நெல் கொள்வனவு செய்து அரசி விநியோகிக்கும் மொத்த செயன்முறையையும் முறையான பரீட்சிப்பிற்கு உட்படுத்தி குறித்த தரப்பினரிற்கு ஒழுங்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் விரைவில் நடவடிக்கை எடுத்து

	ஆண்டுகளை விஞ்சியுள்ள போதும் மாவட்ட செயலகத்தினால் அறவிட்டிருக்கவில்லை.	பதவிய ஸ்ரீ புர அரிசி ஆலை உரிமையாளர்கள் இருவரில் ஒருவர் தற்போது அனைத்து தொகையையும் செலுத்தியுள்ளதுடன் மற்றவரிற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சேருவில இரண்டு ஆலை உரிமையாளர்களில் ஒருவரிற்கு சட்ட நடவடிக்கை எடுக்க சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், கந்தலாய் இற்கும் மற்றைய ஆலை உரிமையாளரிற்கு தற்போது கொழும்பு குற்றவியல் புலனாய்வு அலகிற்கு சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் அனுப்பியுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	அறவிட வேண்டிய நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டு சனவரி முதல் நவம்பர் வரையான காலஎல்லையினுள் குச்சவேலி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்த 78 கர்பிணித் தாய்மாரினால் கிரயம் ரூபா 351,000 ஆன போசாக்கு படிகளை பெற்றிருக்கவில்லை.	சில தாய்மாரினால் கர்பிணி காலப்பகுதியினுள் பிரிவிற்கு வெளியில் வேறு பிரிவுகளிற்கு செல்வதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தங்களிற்கு உரிய போசாக்கு முத்திரை பத்திரங்களை குறித்த பிரதேச செயலக பிரிவிற்கு மாற்றித்தருமாறு கோராது பிரிவிலிருந்து வெளிச் செல்வதால் மற்றும் சில தாய்மார்கள் முத்திரை பத்திரங்களை தொலைத்துள்ளதாலும் மற்றும் இந்த போசாக்கு பொதியை பெற்றுக் கொள்ள அறிவுரித்திய போதும் இந்த போசாக்கு பொதியை பெற்றுக் கொள்ளாததால் இந்த படிகள் எஞசுவதற்கு காரணமாகவுள்ளது.	சரியான வேலைத் திட்டமொன்றை தயாரித்து முறையான மேற்பார்வையின் கீழ் நலனாளர்களிற்கு நலன்களை வழங்குவதனை உறுதிப்படுத்த வேண்டும்.
(இ)	திருகோணமலை வலைய கல்வி அலுவலகத்தின் பொறியியலாளரினால் புல்மூட்டை மகா வித்தியாலயத்தில் கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு ரூபா 4,287,987 ஆன மொத்த கிரய மதிப்பீடொன்றை தயாரித்திருந்ததுடன் அந்த மதிப்பீட்டின் 09 உருப்படிகளின் மதிப்பீட்டு பெறுமதிகள் 11 சதவீதம் முதல் 397 சதவீதம் வரை அதிக கிரய விலகலுடன் தயாரிக்கப்பட்டு இறுதி பட்டியல்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. இந்த செயற்திட்டத்தை குச்சவேலி பிரதேச	திருகோணமலை வலைய கல்வி அலுவலகத்தின் பொறியியலாளரினால் புல்மூட்டை மகா வித்தியாலயத்தில் கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு மதிப்பீடு செய்த தொகையான ரூபா 4,287,987 ஆன மொத்த கிரய மதிப்பீட்டை தயாரித்திருந்ததுடன் திருகோணமலை வலைய கல்வி அலுவலகத்தின் பொறியியலாளரின் விலகல் அறிக்கை பிரகாரம் (variation	சரியாக தேவைப்பாட்டை இனங்கண்டு முறையான ஆய்வின் பின்னர் இயலுமானவரை மதிப்பீட்டை சரியாக தயாரிக்க வேண்டும்.

செயலகத்தினால் செயற்படுத்தியிருந்தது.	report) இந்த பட்டியல் கொடுப்பனவு செய்ததாக தயவுடன் அறிவிக்கிறேன்.	

3.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் மாவட்ட செயலகத்தில் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டியதுடன் அந்த தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை ஆக்கபூர்வமாக நடாத்திச் செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், அந்த மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், அவ்வாறான மீளாய்வொன்றை மேற்கொண்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	ஆக்கபூர்வ உள்ள கட்டுப்பாட்டு தொகுதியை உறுதி செய்வதற்காக வருடாந்தம் அதிகரத்தை பகிர்தல் மற்றும் நிலையான கட்டளை வெளியிட்டுள்ளதுடன் நிறுவனத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளிற்கும் உரியதாக செயற்படுத்த வேண்டிய உள்ளக கட்டுப்பாடுகள் உள்ளடங்கிய ஆவணமொன்றை பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்திற்கு வெளியிடப்பட்டுள்ளதுடன் அந்த கட்டுப்பாடுகளின் செயற்பாடுகள் தொடர்பாக வருடாந்தம் மீளாய்வு செய்து இந்த 2025 ஆண்டு முதல் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.	2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 சட்டம், விதி மற்றும் பிரமாணங்களிற்கு இணக்கமின்மைகள்

	அவதானிப்புக்கள்				
	சட்டம், விதி மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணக்கமின்மைகள்**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	நிதிப்பிரமாணம் 104(4) பிரிவு	-	KB-957 கொண்ட மொன்டேரோ ஜீப் வண்டி 2023 சனவரி 28 திகதி பாரிய விபத்திற்குள்ளாகி சாரதி மரணித்ததுடன் அது தொடர்பான விசாரணையின் பின்னர் நட்ட சேதம் இடம்பெற்ற திகதி முதல் மூன்று மாதங்களிற்குள் முழுமையான	இலக்கம் EPKB – 0957 கொண்ட மொன்டேரோ ஜீப் வண்டி 2023.01.28 திகதி பாரிய விபத்திற்குள்ளாகி சாரதி மரணித்ததுடன் அது தொடர்பாக பொலிஸ் விசாரணை தற்போது	நிதிப்பிரமாணம் 104(4) பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் விசாரணை ஒன்றை மேற்கொண்டு அறிகையை சமர்ப்பிக்க வேண்டும்.

			அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இடம்பெறுகின்றது. நீதிமன்ற நடவடிக்கையும் தற்போது முடிவடையவில்லை.	
(ஆ)	சுற்றறிக்கை இலக்கம் 09/2009 மற்றும் 2009 ஏப்ரல் 16 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் 2 (iv) பந்தி	4,581,676	மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின படிகள் செலுத்தும் போது விரல் அடையால இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தல் அத்தியசியமான போதும் மொரவெவ, பதவி ஸ்ரீபுர, கோமரங்கடவல, சேருவில பிரதேச செயலகங்களில் உத்தியோகத்தர்களினால் அவ்வாறு செயற்படாது மீளாய்வாண்டினுள் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளத்தை பெற்றிருந்தனர்.	மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின படிகள் செலுத்தும் போது விரல் அடையால இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தல் செய்யப்படுவதுடன் விரல் அடையால இயந்திரம் செயலிழந்து காணப்படும் காலப்பகுதியில் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் வரவு மற்றும் வெளிச் செல்லல் பதிவேட்டை அடிப்படையாக்க கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது விரல் அடையால இயந்திரத்தை அடிப்படையாக்க கொண்டு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின படிகள் கொடுப்பனவு செய்யப்படுவதாக தயவுடன் அறவிக்கிறேன்.	இலக்கம் 09/2009 மற்றும் 2009 ஏப்ரல் 16 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டுமெனவும் அவ்வாறு செயற்படாதது தொடர்பாக குறித்த தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 3.1 பந்தி	-	ஒவ்வொறு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாதங்களின் பின்னர் அல்லது 25000 கிலோ மீற்றர் தூர ஓட்டத்தின் பின்னர் அல்லது இயந்திரத்துடன் தொடர்பான பிரதான திருத்தத்தின் பின்னர் எனும் விடயங்களில் முதலாவது இடம்பெறும்	தற்போது பட்டினம் மற்றும் சூழல் பிரதேச செயலகத்தின் இலக்கம் 251-3541 மற்றும் WP PA-3837 கொண்ட 02 கெப் வண்டிகளும் 2025 ஆண்டில் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	குறித்த சுற்றறிக்கை பிரகாரம் எரிபொருள் பரீட்சிப்பு விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சந்தர்ப்பத்தில் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ள வேண்டிய போதும், திருகோணமலை பட்டினம் மற்றும் சூழல் பிரதேச செயலகம் 2 கெப் வண்டிகளிற்காக முறையே 2013 மற்றும் 2018 ஆண்டு முதல் 2025 பெப்ரவரி 14 கணக்காய்வு திகதி வரை எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டுஇருக்க வில்லை.

3.6 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதிக்கு தயாரிக்கப்பட்டிருந்த வைப்பு இணக்கக் கூற்றின் பிரகாரம் 02 ஆண்டுகளிற்கும் 05 இற்கும் இடையில் தீர்க்கப்படாத ரூபா 1,203,011 ஆன வைப்பு மீதிகள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.	2024 திசெம்பர் 31 திகதிக்கு தயாரிக்கப்பட்டிருந்த வைப்பு இணக்கக் கூற்றின் பிரகாரம் 02 ஆண்டுகளிற்கும் 05 இற்கும் இடையில் தீர்க்கப்படாத ரூபா 1,203,011 ஆன வைப்பு மீதிகள் காணப்படுகின்றன.	நிதிப்பிரமாணம் பிரகாரம் முறையாக செயற்பட்டு குறித்த வைப்பு மீதிகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 திகதியன்று வைப்பு பேரேட்டின் பிரகாரம் ஒப்பந்தத்திற்கான நிறுத்தல் தொகையினுள் 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 204,323 ஆன 07 வைப்பு மீதிகள் 2024 ஆண்டின் இணக்கக் கூற்றில் வைப்பு காலப் பகுப்பாய்வில் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	2024 திசெம்பர் 31 திகதியன்று வைப்பு பேரேட்டின் பிரகாரம் ஒப்பந்தத்திற்கான நிறுத்தல் தொகையினுள் 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 204,323 ஆன 07 வைப்பு மீதிகள் 2024 ஆண்டின் இணக்கக் கூற்றில் வைப்பு காலப் பகுப்பாய்வில் ஆண்டு 02 - ஆண்டு 05 இனுள் உள்ளடக்க வேண்டிய போதும் 2024 ஆண்டின் இணக்க கூற்றிற்கு உள்ளடக்கும் போது தவறுதலாக மீண்டுமொறு முறை காலப் பகுப்பாய்வில் ஆண்டு 01 - ஆண்டு 02 என உள்ளடக்கப்பட்டுள்ளது. கணனிக்கு உட்படுத்தும் போது ஏற்பட்ட தவறின் காரணமாக அவ்வாறு ஏற்பட்டுள்ளதுடன் மீண்டுமொறு முறை இவ்வாறு இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கிறேன்.	காலப் பகுப்பாய்விற்குரிய தகவல்களை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 02/2018 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி பிரகாரம் பிரதேச செயலகத்தினால் பொது மக்களிற்கு வழங்கும் சேவைகளை முன்னுரிமைப்படுத்தி முக்கிய 5 சேவைகளிற்குரியதாக சிறபான இலக்குகளை தீர்மானித்து அந்த இலக்குகள் தொடர்பான அறிக்கை ஒன்றை மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். மாவட்ட செயலகத்தினால் அனைத்து பிரதேச செயலகங்களின் சிறப்பான இலக்குகளை பொழிப்பாக்கி தயாரிக்கப்பட்ட அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதி ஒன்றுடன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு ஒவ்வொரு ஆண்டும் சனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டிய போதும், பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் 2024 ஆண்டிற்குரியதாக அந்த அறிக்கையை சமர்ப்பித்து இருக்கவில்லை.	மாவட்ட செயலகத்தினால் அனைத்து பிரதேச செயலகங்களினதும் சிறப்பான இலக்குகளை பொழிப்பாக்கி தயாரிக்கும் அறிக்கையை தற்போது தயாரித்துக் கொண்டு இருப்பதுடன் இந்த 2025 ஆண்டில் அதனை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கிறேன்.	சுற்றறிக்கை பிரகாரம் செயற்பாட வேண்டியதுடன், அவ்வாறு செயற்படாதது தொடர்பாக குறித்த தரப்பினரிற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் செயற்படுத்திய குறை வருமானமுடையவர்கள் மற்றும் மீள் குடியேறிய இடம்பெயர்ந்த குடும்பங்களிற்காக 2021 மற்றும் 2023 ஆண்டுதகளில் கந்தளாய் பிரதேச செயலகத்தினால் இனங்கண்டு வழங்கிய ரூபா 600,000 ஆன 04 வீடுகள் மற்றும் ரூபா 100,000 ஆன 15 வீடுகள் நிர்மாணிப்பு நிறைவடைந்து இருக்கவில்லை.	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் செயற்படுத்திய இந்த வீடமைப்பு வேலைத் திட்டத்தில் கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய இப் பிரச்சினைக்குரிய நிலைமை தொடர்பாக இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் பிராந்திய கணக்காய்வு குழுவில் மற்றும் மாவட்ட கணக்காய்வு குழுவிலும் அடிக்கடி விடயங்களை சமர்ப்பித்ததாகவும், அதற்காக நிர்நதர தீர்வொன்று கிடைத்துள்ளதாகவும், குறிப்பிட்டுள்ளவாறு அந்த வீட்டு அலகுகளில் வேலைகளை நிறைவு செய்ய முடியாமைக்கு உண்மையாக காரணமானது மதிப்பீடு தயாரித்த காலஎல்லையான 2019 ஆண்டிற்கு ஒப்பாக நிதிஏற்பாடு கிடைத்து பணிகளை ஆரம்பிப்பதற்காக எடுத்த காலத்திற்கு இடையே திடீரென நாட்டில் ஏற்பட்ட சீரற்ற பொருளாதார	செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நிறுவனத்துடன் ஒறுங்கிணைந்து சரியான அங்கீகாரத்தின் மீது குறித்த நடவடிக்கைகளை வினைத்திறனான நிறைவு செய்ய வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்த வேண்டும்.

நிலைமையின் மீது கட்டிடப் பொருட்களிற்கு ஏற்பட்ட அதிக விலை அதிகரிப்பாகும்.

4.3 செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிட்டுள்ளமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கிராமிய பாதைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டம் 2021 ஆண்டின் கீழ் (RRDP) 69 பாதைகளை நிர்மாணிப்பதற்காக கூட்டுத் தொகை ரூபா 99 மில்லியன் நிதிஏற்பாட்டை ஒதுக்கி வெருகல் மற்றும் மூதூர் பிரதேச செயலகங்களிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், நிர்மாணிப்பதற்காக கூட்டுத்தொகை ரூபா 21.98 மில்லியன் ஒப்பந்தத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் நடைமுறை ஆண்டு வரையும் இந்த அனைத்து பணிகளையும் தொடர்ந்து செயற்படுத்தாது கைவிடப்பட்டிருந்தது.	2021 ஆண்டில் பிரதேச செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்திய 69 கிராமிய பாதைகள் காணப்படுகின்றன. இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த 2021 நவம்பர் மாதத்தில் ரூபா 99.00 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டதுடன், அந்த ஆண்டு முடிவடையும் அளவில் செயற்பாடுகளை நிறைவு செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	குறித்த தொடர்புடைய நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து விசேட கவனம் செலுத்தி பொருத்தமானவாறு செயற்திட்டத்தை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தந்தலாய் பிரதேச செயலகத்திற்கு சொந்தமான கந்தலாய் பொலிஸிற்கு முன்பாக தனிநபர் அரச வரிசை வீட்டுத் தொகுதி மிகவும் பழமையாகையால் மற்றும் குடியிருக்க பொருத்தமான நிலையில் இல்லாததால் உடைத்து அகற்ற திருகோணமலை மாவட்ட பொறியியலாளரின் பரிந்துரை கிடைத்துள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக மாவட்ட செயலாளரின் இலக்கம் GAT/EST/DSDIV/MA06/11(Kan) மற்றும் 2022 மார்ச் 14 திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தார். கணக்காய்வு திகதிய 2024 ஒக்டோபர் 22 திகதியளவில் அந்த கட்டிடத்தின் 07 வீடுகளில் 05 வீடுகளில் குடியோரியுள்ளதுடன் குறித்த வீட்டுடமையாளர்களின் பதிவு பாதுகாப்பற்றதாக காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது மேற்படி கடிதம் பிரகாரம் உடைந்து அகற்ற பரிந்துரை கிடைத்து 02 ஆண்டுகளும் 07 மாதங்களும் கடந்துள்ள போதும்	நிதி அமைச்சின் 2022.04.26 திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 3/2022 இன் அரச செலவுகளை கட்டுப்படுத்தலை அனைத்து அரச நிறுவனங்களினாலும் கட்டாயமாக பின்வற்ற வேண்டுமென அறிவுரை விநியோகிக்கப்பட்டது. ஆகையால், அந்த வீடுகளை உடைத்து அகற்றுதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எதிர்காலத்தில் அதற்காக நிதிஏற்பாட்டை ஒதுக்கிய பின்னர் அந்த வீடுகளை உடைத்து அகற்றி தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும், பிரிவில் ஏனைய அரச நிறுவனங்களில் கடமையாற்றும் குடியிருப்பாளர்களிற்கு தங்குமிட வசதி இல்லாத காரணத்தால் சில சந்தர்ப்பங்களில் இந்த வீடுகளில் குடியிருக்க அனுமதி கோருவதால் அந்த வீடுகள் குடியிருக்க பொருத்தமற்றதாக காணப்பட்ட போதும் அங்கு ஏதேனும் விபத்துக்கள் இடம்பெற்றால் அனைத்து பொறுப்புகளையும் அவர்களினாலேயே	நிலவும் அபாய நிலைமையை கவனத்திற் கொண்டு உயர் மற்றும் ஆதனங்களை பாதுகாத்துக் கொள்ளும் வேலைத் திட்டமொன்றை இடவேண்டும்.

	குறித்த அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பொறுப்பேற்பது எனும் இணக்கப்பாடு மற்றும் அவர்களின் கோரிக்கையின் மீது அந்த வீடுகளில் குடியிருப்பதற்காக வழங்கியுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	
(ஆ)	பிரதேச செயலாளர் உத்தியோக பூர்வ இல்லங்கள் 02 உள்ளடங்களாக 07 உத்தியோகபூர்வ இல்லங்கள் சேருவில் பிரதேச செயலகத்திற்கு சொந்தமாக காணப்பட்ட போதும் 02 உத்தியோகபூர்வ இல்லங்களில் மாத்திரம் குடியருப்பாதாக அவதானிக்கப்பட்டதுடன் அந்த குடியிருக்கும் 02 இல்லங்களும் கூட திருத்த வேண்டிய நிலையில் காணப்படுவதால் காணப்படும் சொத்துக்களிலிருந்து சிறப்பான பயன்பாட்டை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின்றது. அதன் பிரகாரம் பழைய பிரதேச செயலக உத்தியோகபூர்வ இல்லம், சோமபுர சுற்றுலா விடுதி மற்றும் 42 ஆண்டுகளை கடந்துள்ள 05 பொது உத்தியோகபூர்வ இல்லங்களும் திருத்த வேண்டிய நிலையில் காணப்பட்டன.	குறித்த உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்துவதனை 2025 ஆண்டின் நிதிஏற்பாட்டினால் மேற்கொண்டு நிறைவு செய்வதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	சொத்துக்களின் நிலையான தன்மை மற்றும் பாதுகாப்பிற்காக நிரந்தரமான வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்து விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும்.
(இ)	சேருவில பிரதேச செயலகத்திற்கு சொந்தமான அட்டவணைப்படுத்தப் படாத ஏனைய 05 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் சோமபுர சுற்றுலா விடுதியின் காணி மற்றும் கட்டிடங்களின் உரிமை சேருவில் பிரதேச செயலகத்திற்கு உரித்தற்றதுடன் அந்த காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையை பிரதேச செயலகத்திற்கு சுவீகரித்தலை இதுவரை மேற்கொண்டிருக்கவில்லை.	தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் தொடர்புபட்டு 2025 ஆண்டில் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களை இந்த பிரதேச செயலகத்திற்கு சுவீகரிக்க தேவையான நடவடிக்கை எடுத்தலை மேற்கொள்வதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	கட்டிடங்களின் உரிமையை சேருவில பிரதேச செயலாளரின் பெயரில் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 நட்டம் மற்றும் சேதங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	விபத்திற்குள்ளான திருகோணமலை மாவட்ட செயலகத்திற்குரிய KB-0957 கொண்ட ஜீப் வண்டியை மீண்டும் பழைய நிலைக்கு ஆக்குவதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,124,270 ஆன நட்டத்தை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து சேத ஈட்டிக் கொள்ள முடியாததன் ஊடாக அரசிற்கு அப் பெறுமதியால் நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் மரணித்த சாரதியின் பிரேத பரிசோதனை அறிக்கையின் பிரகாரம்	விபத்திற்குள்ளான இலக்கம் EP KB – 0957 உடைய மொன்டேரோ ஜீப் வண்டியை மீண்டும் பழைய நிலைக்கு ஆக்குவதற்காக ரூபா 2,124,270 தொகை செலவிடப்பட்டுள்ளதுடன் விபத்து நிகழ்ந்த சந்தர்ப்பத்தில் சாரதி மது போதையுடன் வண்டியை செலுத்தியுள்ளதாக மேற்பார்வை மருத்துவ அறிக்கை பிரகாரம் வெளிப்படுவதால் காப்புறுதி நிறுவனத்தினால் சேதத்தை மீள்நிரப்ப முடியாது வாகன விபத்து இடம்பெறும் சந்தர்ப்பத்தில் சாரதிக்கு ஏற்பட்டுள்ள	பின்தொடர் நடவடிக்கைகளை உரியவாறு மேற்கொண்டு காலரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இவ்வாறான நிலைமைகளை தவிர்த்துக் கொள்ளும் வேலைத் திட்டமொன்றை

	ஏற்பட்டுள்ள காயங்களின் தன்மையினால் வெளிப்படுத்தப்படுவது விபத்திற்குள்ளாகும் போது வண்டியை செலுத்தியுள்ளது சாரதி இல்லையென்பதாகும்.	காயம் பிரகாரம் வாகனத்தை செலுத்தியுள்ளது சுமித் ஜயதிலக எனும் சாரதி இல்லையென நீதிமன்ற மருத்துவ உத்தியோகத்தரின் அபிப்பிராயமாக இருப்பதால் இது தொடர்பாக பொலிஸ் புலனாய்வு தொடர்ந்தும் இடம்பெறுகின்றது. நீதிமன்ற செயற்பாடுகளும் தொடர்ந்தும் இடம்பெறுவதால் பொலிஸ் புலனாய்வு முடிவடைந்தவுடன் மற்றும் விசாரணை தொடர்பாக நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்படும் தீர்ப்பின் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	நடைமுறைப்படுத்த வேண்டும்.
(ஆ)	மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 12 வாகனங்கள் தொடர்பாக ரூபா 5,678,948 பெறுமதியான நட்ட சேதங்களிற்காக 1999 ஆண்டு முதல் 2024 வரை 25 ஆண்டுகள் கடக்கும் வரை இடம்பெற்ற வாகன விபத்துக்கள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகளை நிறைவு செய்திருக்கவில்லை.	திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 12 வாகனங்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்துள்ள மற்றும் விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்துவரும் வாகனங்கள் தொடர்பாக தற்போதைய நிலைமை அறிக்கையிடப்பட்டுள்ளது.	குறித்த நடவடிக்கைகளை விரைவில் நிறைவு செய்ய தேவையான முயற்சிகளை எடுக்கவும் காலரீதியாக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளாதது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.6 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தம்பளகமுவ பிரதேச செயலகத்தின் கீழ் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் 2018 ஜுலை 09 திகதி முதல் பணித் தடைக்குட்பட்டு பின்னர் கட்டாய ஓய்வுபெறப் செய்யப்பட்டுள்ளதுடன் அவர் அரச சேவையில் ஈடுபட்ட போது பெற்ற இடர் கடனிலிருந்து அரசிற்கு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 233,641 தொகை ஆகும். கணக்காய்வு திகதிய 2024 நவம்பர் 13 திகதிவரை 06 ஆண்டுகளும் 04 மாத காலம் கடந்துள்ள போதும் இந்த கடன் மீதியை அறவிட்டிருக்கவில்லை.	இந்த அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் போதும் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக கட்டாய ஓய்வு பெறச் செய்த கிராம உத்தியோகத்தர் திரு எம்.ஏ.எம்.ஹாரிக் அவர்கள் கடமையில் ஈடுபட்டிருந்த போது பெற்றுக் கொண்ட இடர் கடன் தொகைக்காக அவரினால் அவ்வப் போது இந்த அலுவலகத்திற்கு பணம் செலுத்தியுள்ளதுடன், மேலும் ரூபா 233,641/= தொகையை அரசிற்கு செலுத்த வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் அவர் செலுத்த வேண்டிய மொத்த கடன் தொகையையும் அவரின் ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து கட்டாயமாக கழித்துக் கொள்ள குறித்துள்ளதுடன், இந்த ஒழுக்காற்று கட்டளைக்கு எதிராக திரு பாரிக் அவர்களினால் சமர்ப்பித்த மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் ஓய்வு பெறச் செய்வதற்கான அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ள போதும் இதுவரை இந்த ஓய்வுபெறல் அங்கீகரிக்கப்படவில்லை. ஓய்வு பெறலை	குறையாக செயற்பட்டு கடன் மீதிகளை உடனடியாக தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		அங்கீகரித்துக் கொள்ள ஓய்வுபெறுவது தொடர்பான நடவடிக்கைகள் பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள அனுப்பப்பட்டுள்ளது.	
(ஆ)	பிரதேச செயலகங்கள் 06 இனால் மீளாய்வாண்டு வரை கூட்டுத் தொகை ரூபா 524,931,349 பெறுமதியான நீண்டகால காணி மற்றும் கட்டிட குத்தகை வாடகை வருமானத்தை அறவிட்டிருக்கவில்லை.	தற்போது 2025.04.30 திகதி வரை ரூபா 11,345,390.00 தொகை நீண்ட கால காணி மற்றும் கட்டிட குத்தகை வாடகை வருமானமாக அறவிட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையையும் அறிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	காலரீதியாக மற்றும் வருமானம் அறவிடாத குறித்த உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல், குறித்த நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	பிரதேச செயலகங்கள் 04 இனால் மீளாய்வாண்டு வரை கூட்டுத் தொகை ரூபா 868,636 ஆன குருங்கால காணி மற்றும் குருங்கால குத்தகை வாடகை வருமானத்தை அறவிடாது நிலுவையாக காணப்பட்டதுடன் இந்த நிலுவை தொகையை அறவிட ஆக்கபூர்வ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது 2025.04.30 திகதி வரை ரூபா 53,600.00 தொகை குருங்கால காணி மற்றும் குருங்கால குத்தகை வாடகை வருமானமாக அறவிட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையையும் அறிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	- மேற்படி -
(ஈ)	மாவட்ட செயலகம் உள்ளடங்களாக 10 பிரதேச செயலகங்களினால் மீளாய்வாண்டு வரை கூட்டுத் தொகை ரூபா 3,259,878 ஆன அரச உத்தியோகத்தர்களிற்காக வழங்கிய முற்பணத்திற்காக நீண்டகாலமாக அறவிடப்படாத நிலுவை கடன் மீதிகள் காணப்படுவதாக அதவானிக்கப்பட்டது.	திருகோணமலை மாவட்ட செயலகத்தின் அரச உத்தியோகத்தர்களிற்கு வழங்கிய முற்பணத்திற்காக நீண்ட காலமாக அறவிடப்படவுள்ள கடன் மீதிகளை தற்போது அறவிட்டுள்ளதுடன் ஏனைய பிரதேச செயலகங்களில் சில பிரதேச செயலகங்கள் தற்போது அறவிடவுள்ள மீதிகளை அறவிட்டுள்ளதுடன் மேலும் நிலுவையாகவுள்ள கடன் மீதிகளை அறவிட வேண்டியுள்ள பிரதேச செயலகங்களினால் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு செல்வதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	நிலுவை கடன் மீதிகளை அறவிட காலரீதாயக நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களிற்கு நடவடிக்கை எடுக்கவும், நிலுவை மீதிகளை விரைவில் அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	திருகோணமலை நகர மற்றும் கிராம பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III தரத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களினால் போலியான பரீட்சை பெறுபேறுகளை சமர்ப்பித்து நியமனம் பெற்று 2015 செப்டம்பர் 15 திகதி முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரை	(i) பரீட்சை பெறுபேறுகள் போலியானது என உறுதியானதன் பின்னர் அவரின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ii) இடர்கடனாக அறவிட வேண்டிய ரூபா 205,650.00 தொகையை அவரின் பிணையாளரிடமிருந்து தவணை வாரியாக அறவிடப்படுகின்றது. (iii) 2015-2021 வரையான காலத்தினுள்ள தனிநபர் கோவை தொடர்பாக	குறித்த செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொண்டு அதற்கு பொறுப்பான தரப்பினரிற்கு சட்ட நடவடிக்கை எடுக்க உடனடியாக செயற்பாட வேண்டியதுடன்

	சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 3,305,197 பெறப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக பெற்றிருந்த இடர் கடன்களிலிருந்து 2022 திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 205,650 ஆனதுடன் 2015 ஒக்டோபர் 14 திகதி முதல் 2016 பெப்ரவரி 25 திகதி வரை முழுமையாக சம்பளத்துடன் மகப்பேற்று விடுமுறை மற்றும் 2019 ஆகஸ்ட் 27 திகதி முதல் 2019 செப்டர்பர் 05 திகதி வரை 10 நாட்கள் நாட்டிற்கு வெளியே விடுமுறையும் பெற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டது.	கடமையாற்றிய உத்தியோகத்தர்களிடம் குறித்த தாமதத்திற்கு காரணம் வினவப்பட்டுள்ளது. (iv) சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தியுள்ள ரூபா 3,305,197 தொகையை 2024.05.21 திகதிக்கு முன்னர் அரசிற்கு செலுத்துமாறு உத்தியோகத்தரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	அரசிற்கு இடம்பெற்றுள்ள நட்டத்தை உடனடியாக தீர்த்துக் கொள்ள வேண்டும்.
(ஊ)	பிரதேச செயலகங்கள் 11 இற்கு உரியதாக செயற்படும் 22 சமுர்த்தி வங்கிகளிற்கு உரியதாக 2024 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்படாது காணப்படும் நிலுவை மீதி ரூபா 209,472,396 தொகையானது.	தற்போது பிரதேச செயலகங்கள் 11 இற்கு உரியதாக செயற்படும் 22 சமுர்த்தி வங்கிகளிற்கு உரியதாக 2025.04.30 திகதி வரை ரூபா 11,025,337.78 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக மேலும் தயவுடன் அறிவிக்கிறேன்.	நிலுவை கடனை காலரீதியாக அறவிடாத உத்தியோகத்தர்களிற்கு நடவடிக்கை எடுக்கவும், குறித்த நிலுவை வருமானத்தை உடனடியாக அறவிடவும் செயற்பாடுகளை எடுக்க வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்த நோக்கங்களை அடைந்து கொள்ளல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிலைவேறான இலக்குகள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொதியாவில் அறிந்திருக்காததுடன் நிலைவேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணல் இடம்பெறாததால் மீளாய்வாண்டில் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொண்டிருக்கவில்லை.	திருகோணமலை மாவட்டத்திற்கு உரித்தாகும் வகையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளிற்காக அமைச்சு / திணைக்களம் மற்றும் ஏனைய தரப்பினரின் மூலம் மாவட்டத்திற்கு கிடைக்கும் நிதியத்தின் பிரகாரம் நிலைவேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்தப்படும்.	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்காக மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்றை அறிமுகம் செய்ய வேண்டும்.

6. மனிதவள முகாமைத்தவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு இறுதி வரை சிரேஷ்ட மட்டத்திற்குரிய உத்தியோகத்தர் 17 பதவி வெற்றிடங்கள் மூன்றாம் மட்டத்திற்குரிய உத்தியோகத்தர் 21 பதவி வெற்றிடங்கள், இரண்டாம் மட்டத்திற்குரிய உத்தியோகத்தர் 56 பதவி வெற்றிடங்கள், ஆரம்ப மட்டத்திற்குரிய உத்தியோகத்தர் 39 பதவி வெற்றிடங்கள், ஆக மொத்த வெற்றிட அளவு 133 ஆக இருந்நதது.	குறித்த வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	ஆளணி மீளாய்வொன்றை மேற்கொண்டு தேவையான பதவி வெற்றிடங்களை மாத்திரம் நிரப்ப விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தில் மற்றும் பிரதேச செயலகங்களில் சேவைக் காலம் 05 ஆண்டுகளை விஞ்சியுள்ள 455 உத்தியோகத்தர்கள் தொடர்பாக இடமாற்ற கொள்கையை நடைமுறைப்படுத்தி இருக்காததுடன், அதன் காரணமாக இடமாற்ற எதிர்பார்ப்பில் உள்ள உத்தியோகத்தர்களிற்கு சந்தர்ப்பம் கிடைக்காதிருந்தது.	2025 ஆண்டினுள் இந்த நிலைமையை தவர்த்துக் கொள்ள இடமாற்ற குழுவொன்றை நியமித்து நடடிவ்கைகை எடுப்பதாகவும், இரண்டு தேர்த்தல்கள் இடம்பெற்றதால் இடமாற்ற குழுவின் பணிகள் தாமதமாகியது. 2025 ஜுன் மாதம் முதல் இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ள இடமாற்றத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.